Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 3, No.1, 2022, (65-85).

# கலித்தொகையில் பழந்தமிழரின் வாழ்வியல்

## Lifestyle of Ancient People's in Kalithokai

**T. Geethanjali**
Assistant Professor,
Nallamuthu Gounder Mahalingam College,
Pollachi, Tamilnadu, INDIA
t.geethanjalingm@gmail.com

**To cite this article (APA):** Geethanjali, T. (2022). கலித்தொகையில் பழந்தமிழரின் வாழ்வியல். *Journal of Valartamil*, *3*(1), 65-85. https://doi.org/10.37134/jvt.vol3.1.5.2022

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol3.1.5.2022

**ஆய்வுச்சாரம்:** தமிழ் மக்கள் தம்வாழ்வினை அகம், புறம் என இருவகையாகப் பாகுபடுத்தி அதன் கண்ணே நெறிப்படி வாழவும் தலைப்பட்டனர். இவற்றில் அகத்தில் தலைவன் தலைவியின் அன்பொழுக்கம், இல்லறமாண்பு, விருந்தோம்பல், பழக்கவழக்கம் போன்ற வாழ்வியல் கூறுகளைக் கலித்தொகைப் பாடல்களின் மூலம் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. தொகுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தரவுகளை வகைப்படுத்திப் பகுத்தலில் பகுப்புமுறைத் திறானாய்வும், அவற்றை விளக்குவதற்கு விளக்கமுறைத் திறனாய்வும் இவ்வாய்வில் அணுகுமுறைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்க இலக்கியம் எனப்படுவது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இந்நூல்கள் வாழ்வியல் அறத்தினை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளன. ஒழுக்க நெறியை நாம் கடைப்பிடிக்க நற்கருத்துகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன. காலந்தோறும் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் இருப்பினும், என்றும் நிலைத்து இருக்கக்கூடிய சங்க இலக்கியத்தில் சமுதாய மேன்மையையும் இன்றியமையாத தொன்மையுடைய வாழ்வியல் கூறுகளையும் காணமுடிகின்றது. ஒரு இனத்தின் தொன்மையையும், பெருமையையும், அவ்வினத்தின் வரலாற்றுச் சிறப்பினையும் அறிந்துகொள்ள வேண்டுமானால், அம்மக்கள் வாழ்ந்த இடம், பயன்படுத்திய மொழி, அவர்களின் கலை மற்றும் கலாச்சார பண்பாட்டுக் கூறுகள் போன்றவற்றின் வழியாகவே அறிந்து கொள்ள முடியும். இவ்வடிப்படையில் பார்த்தால், ஏறத்தாழ மூவாயிரமாண்டுகளுக்கு முன்பே சிறந்த நாகரிக வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தவர்கள் தமிழர்கள் என்பது புலனாகும். அவ்வகையில் ‘கற்றறிந்தோர் ஏத்தும் கலி’, ‘கல்வி வலவர் கண்ட கலி’ என்று சிறப்பித்துக் கூறப்படும் கலித்தொகையில் பண்டைய தமிழரின் வாழ்வியல் சார்ந்த செய்திகள் ஆராயப்படவுள்ளன.

**கருச்சொற்கள்:** சங்க இலக்கியம், பண்பாடு, பழக்கவழக்கம், வாழ்வியல்முறை

**Abstract:** The Tamil people divided their lives into two types of love life and chastity life and tried to live according to their respective norms. Among these, the purpose of this article is to explore the elements of life such as love, domestic respect, hospitality, and customs of the leader through the songs of the Kali. Based on the collected data, categorical analysis and descriptive analysis have been used as research approaches in this study. These texts are based on the virtue of life. In the Sangam literature, we find elements of the ancient life and essential social superiority, which, though changing from time to time, remain forever. If you want to know the antiquity, glory and historical features of a race, you can know it through the place where those people lived, the language they used, their art and cultural elements. Based on this, it can be known that Tamils had a highly civilized way of life three thousand years ago. Through this research paper, the aspects related to the life of ancient Tamils in Kalithokai are to be explored.

**Keywords**: Sangam Literature, Culture of Ancient People, Customs of Ancient People, Lifestyle of Sangam Ethnic Group

## முன்னுரை

உலக இலக்கிய வரலாற்றிலேயே தமிழ் மொழியும் தமிழ் இலக்கியங்களும் போற்றத்தகு சிறப்பினைப் பெற்றுள்ளன. அதன் சிறப்பிற்குப் பல காரணங்கள் இருந்தாலும், தமிழ் மக்கள் தம் வாழ்க்கையினைப் பிரதிபலிப்பதாகத் தமிழ் இலக்கியங்கள் இருப்பதே இன்றியமையாததாகும். ‘இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி’ என்பதற்கேற்ப தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொன்றுமே மக்கள் தம் வாழ்வினைப் பறைசாற்றுவதாக அமைகின்றது.

## ஆய்வு நோக்கம்

சங்க இலக்கியம் அனைத்து மக்களுக்கும் பொதுப்படையான இலக்கியமாக அமைகின்றது. இஃது ஐவகை நிலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் ஒழுக்கங்கள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. மற்ற நிலங்களைவிட வாழ்வியலில் மேம்பட்ட பண்பாட்டைக் கொண்டு வாழ்ந்த முல்லை நில மக்களின் சமுதாய வாழ்வியல் நிலையை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## ஆய்வு முன்னோடிகள்

சங்க இலக்கியத்தில் முல்லை நில மக்களின் சமுதாய வாழ்வியல் பற்றிய தனி ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, தொடர்பான செய்திகளை வெளிக்கொணர்வதற்கு, பாரதியார் பல்கலைக்கழக ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடுகளான “நற்றிணையில் பழந்தமிழர் வாழ்வியல் மதிப்புகள்” (2010) என்ற ஆய்வேட்டையும், “அகநானூற்றில் களிற்றியானை நிரை காட்டும்

வாழ்வியல்” (2010) என்ற ஆய்வேட்டையும் ஆய்வு முன்னோடிகளாகக் கொண்டு இக்கட்டுரை அமைந்துள்ளது.

## ஆய்வு அணுகுமுறை

கலித்தொகை பாடல்களில் 100 முதல் 115 வரையுள்ள பாடல்களில் கிடைக்கப்பெறும் முல்லைநில மக்களின் வாழ்வியல் பற்றியத் தரவுகளின் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்திப் பகுத்தலில் பகுப்புமுறைத் திறனாய்வும், அவற்றை விளக்குவதற்கு விளக்கமுறைத் திறனாய்வும் பண்பாட்டு அடிப்படையில் ஆய்வதால் பண்பாட்டியல் அணுகுமுறையும் இவ்வாய்வில் அணுகுமுறைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஏறுதழுவுதல்

சங்க இலக்கிய நூல்களிலே ஏறுதழுவுதல் என்னும் நிகழ்வு, கலித்தொகையில் முல்லைக்கலியில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. இஃது ஆடவரின் வீரத்தை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. “தண்டமிழ் நாட்டு மக்களிடத்துப் பண்டைக் காலத்துச் சிறந்து விளங்கிய வீரச்செயல்களுள் ஏறுதழுவுதல் என்பது ஒன்றாகும்” என்று ரா. வேங்கடாசலம் (1957) கூறுகிறார். இக்கருத்து எண்ணிப் பார்க்கத் தக்கதாகும். “இளங்காளைகளை விரட்டி, அவற்றின் பின் ஓடி, அவற்றைப் பிடித்து இளைஞர்கள் அடக்குவர். இவ்வகை நிகழ்ச்சியை “ஏறு கோடல்“ என்பர். ஏறு கோடல் ஒருவிழா போன்று கொண்டாடப்பெறும்” என்று மு. சண்முகம்பிள்ளை (1997) கூறுகிறார். இதன் வழியே ஏறுதழுவுதல் நிகழ்வினை அறியமுடிகின்றது.

தலைவன் ஏறுதழுவ வந்ததைச் சுற்றத்தாரிடம் சொன்னான். சுற்றத்தார் தலைவியின் பெற்றோரிடம் சொல்ல அவர்கள் பறை அறைந்து ஏறுதழுவுதலை விழாவாக நடத்தினர் என்பதை,

**“சொல்லுக பாணியேம் என்றார் அறைக, என்றார் பாரித்தார்**

**மாணிழை ஆறாகச் சாறு”**

(**கலித்தொகை, 2007 :102: 13,14**)

என்ற பாடல் வரிகளில் தெரிந்துகொள்ள முடிகிறது. ஏறுதழுவுவதைப் பெரிய விழாவாக சுற்றத்தார் ஊர்மக்கள் முன்னிலையில் நடத்த ஏற்பாடு செய்தனர் என்பதை அறியமுடிகின்றது.

## எருதின் தோற்றம்

எருதின் தோற்றமானது, ஊழியின் முடிவிலே ஒரு பாகத்தில் உமையை உடைய கடவுள் எருமை வாகனத்தை உடைய கூற்றவன் நெஞ்சத்தைப் பிளந்து குடலைக் கூளிக்குப் பலியாகத் தருவது போன்று இருந்தது என்பதை,

**“குடா; சொரியக் குத்தி குலைப்பதன் தோற்றம் காண்**
**படர் அணி அந்தி, பசுங் கட் கடவுள்**
**இடரிய ஏற்று, எருமை நெஞ்சு இடந்து இட்டு,**
**குடர் கூளிக்கு ஆர்த்துவான் போன்ம்”**

(**கலித்தொகை, 2007: 101: 23 - 26**)

என்ற வரிகளில் தெரிய முடிகின்றது. எருதின் தோற்றமானது, சிவபெருமான் கூற்றுவனை அழித்தது போன்று இருந்தது என்பதை அறியமுடிகிறது. மேலும், சிங்கமும், குதிரையும், யானையும், முதலையும் ஒன்றாகச் சுற்றித்திரியும் போது ஏற்படும் புழுதிப் படலத்தைப் போன்று எருது திரண்டிருக்கும் தொழுவம் இருந்தது என்பதை,

**“பொருமுரண் முன்பின் புகல்ஏறு பலபெய்து**
**அரிமாவும், பரிமாவும், களிறும், கராமும்,**
**பெருமலை விடாரகத்து, ஒருங்குஉடன் குழீஇ”**

(**கலித்தொகை, 2007: 103: 17 - 19**)

என்ற கலித்தொகை பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகின்றது. ஏற்றினைத் தழுவும் இடமான தொழுவம், தூசிமண்டலம் போன்று இருந்ததையும் அறிய முடிகின்றது.

## எருதின் நிறம்

ஏறுதழுவுதலில் பல நிற எருதுகள் இருந்துள்ளதை, முல்லைக்கலிப் பாடல்களில் காணமுடிகின்றது. பலராமனைப் போன்ற வெள்ளை நிறத்திலும், திருமாலின் நிறத்தைப் போன்ற கரிய நிறத்திலும், சிவபெருமானைப் போன்ற சிவப்பு நிறத்திலும் முருகனைப் போன்ற இளஞ்சிவப்பு நிறத்திலும் எருதுகள் இருந்தன என்பதை,

**“வான் உற ஓங்கிய வயங்குஒளிர் பனைக்கொடிப்**
**பால்நிற வண்ணன் போல்பழி தீர்ந்த வெள்ளையும்,**

**பொருமுரண் மேம்பட்ட பொலம் புனைபுகழ்நேமித்**
**திருமறு மார்பன் போல திறன் சான்ற காரியும்,**
**மிக்கு ஒளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதல்**
**முக்கண்ணான் உருவே போல் முரண்மிகு குராலும்,**
**மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப் போர்**
**வேல் வல்லான் நிறனே போல் வொருவந்த சேயும்"**

(**கலித்தொகை, 2007: 104: 7 - 14**)

என்ற வரிகளில் எருதுகள் நிறத்தினைக் கூறுவதற்காக, இறைவனின் நிறத்தைச் சுட்டியிருப்பதிலிருந்து, எருதுகளின் சிறப்பினையும் அறியமுடிகிறது.

## எருதின் வலிமை

எருதினை அடக்குவதற்காக வரும் வீரர்கள் அதிர்ச்சியால் ஓடுமாறு செய்தும், எலும்புகள் முறியுமாறு செய்தும், குடலைக் கொம்பால் குத்தி மாட்டிக் கொள்ளும் வலிமை மிக்க எருதுகள் இருந்தன. இத்தகைய எருதுகளே ஏறுதழுவுதலில் இடம் பெற்றன என்பதை,

**"இரிபு எழுபு அதிர்பு அதிப்பு இகந்து உடன்பலர் நீங்க,**

**வரி பரிவு இறுபு இறுபு குடர்சோரக் குத்தி, தன்**
**கோடு அழியக் கொண்டானை ஆட்டித் திரிபு உழக்கும்"**

(**கலித்தொகை, 2007: 104:39-41**)

என்ற வரிகளில் அறியமுடிகின்றது. எருது மிகவும் வலிமை உடைய பசு இனத்தினைச் சேர்ந்தது. எருதினை மற்றவர்கள் கட்டுப்படுத்த முற்பட்டால் அவர்களைக் கொல்லாமல் விடாது. அத்தகைய எருதுகளே ஏறுதழுவுதலில் இடம்பெற்றன என்பதை உணரமுடிகின்றது. வீரர்களின் வயிற்றை எருதுகள் கொம்பால் குத்தி, குடலினை உருவியதும் இதனால் இரத்தம் படிந்த கொம்புகளுடன் எருதுகள் காணப்பட்டதனை,

**"குருதிக் கோட்டொடு குடர் வலத்தன"**

(**கலித்தொகை, 2007: 103:27**)

என்ற வரிகளில் எருதுகளின் வலிமை மற்றும் அதன் சிறப்பினையும் அறியமுடிகின்றது.

## ஏறுதழுவ வந்த ஆய்மகன் தோற்றம்

ஆய்மகன் கொன்றை, காயா, வெட்சி, பிடவம், முல்லை, கஞ்சங்குல்லை, குருந்தம், கோடல், பாங்கர் முதலிய பூக்களைத் தொகுத்து, கண்ணியாகச் சூடிக்கொண்டு ஏறுதழுவ வந்தான் என்பதை,

**"மெல்இணர்க் கொன்றையும், மென்மலர்க் காயாவும்,**
**புல்இலை வெட்சியும், பிடவும், தளவும்,**
**குல்லையும், குருந்தும், கோடலும், பாங்கரும்,**
**கல்லவும் கடத்தவும் - கமிழ்கண்ணி மலைந்தனர்,**
**பல்ஆன் பொதுவர், கதழ்விடைகோள் காண்மர்;"**

(**கலித்தொகை, 2007: 103: 1-6**)

என்ற வரிகளில் அறியமுடிகின்றது. பலவகைப் பூக்களைச் சூடிய ஆய்மகன், ஏறுதழுவ வந்தான் என்பதை அறியமுடிகின்றது. ஏறுதழுவ வந்த பொதுவனான ஆய்மகன், போருக்குச் செல்லும்போது ஏற்படும் சினத்தைப் போன்று ஆரவாரத்துடன் தொழுவத்திற்குள் சென்றான். இதனை,

**"சீர்கெழு சிலை நிலைச் செயிர் இகல் மிகுதியின், சினப்பொதுவர்**
**தூர்பு எழு துதைபுதை துகள் விசும்புஉற எய்த,**
**ஆர்பு உடன் பாய்ந்தார், அகத்து"**

(**கலித்தொகை, 2007: 105:27-29**)

என்ற வரிகளில் காண முடிகிறது. ஏறுதழுவுதலை வீரச்செயலாகக் கருதி வெற்றி பெறவேண்டும் என்ற சினத்துடன் பொதுவனான ஆய்மகன் ஏறுதழுவச் சென்றுள்ளான். போரில் மன்னன் பகைவர்மீது கொள்ளும் சினத்தினைப்போன்று பொதுவன் இருந்தான் என்பதை அறியமுடிகின்றது.

## ஏறுதழுவ முற்படுதல்

ஆயர் இனத்துப் பொதுவர்கள் சிலர், எருதின் கழுத்தினைப் பிடித்துத் தழுவினர். திமில் முறியும்படி தழுவினர் சிலர். தோளுக்குள் கழுத்தைப் புகவிட்டுத்

தழுவினர் சிலர். கொம்புகள் உடலில் படுவதை அஞ்சாமல் ஏற்றுக் கொண்டனர் சிலர். இவ்வாறாக ஏறுதழுவத் தொடங்கியதை,

**"மருப்பில் கொண்டும், மார்பு உறத் தழீஇயும்,**
**எருத்திடை அடங்கியும், இமில்இறப் புல்லியும்,**
**தோள்இடைப் புகுதந்தும், துதைந்துபாடு ஏற்றும்,**

**நிரைபு மேல் சென்றாரை நீள் மருப்பு உறச்சாடி"**

(**கலித்தொகை, 2007: 105:30-33**)

என்ற வரிகளில் அறியமுடிகின்றது. ஏற்றினை அடக்கும் பொருட்டு பொதுவராகிய ஆயர்கள், எருதினைப் பலவாறாகத் தழுவிய நிலையை அறியமுடிகின்றது. மேலும்,

**"பாடு ஏற்றுக் கொள்பவர், பாய்ந்து மேல் ஊர்பவர்**
**கோடுஇடை நுழைபவர், கோள் சாற்றுபவரொடு"** (**கலித்தொகை, 2007: 104:55, 56**)

என்ற வரிகளில் ஏற்றினைத் தழுவிய பொதுவர்கள் ஏற்றின் கொம்புகளை மார்பில் தாங்கிக் கொண்டும் அதன் கொம்பின் மேல் பாய்ந்தும் கொம்பின் இடையினைப் பிடித்துக் கொண்டும் ஏறுதழுவுவதற்கு வல்லவன் என்று கூறிக்கொண்டு ஏற்றினைத் தழுவவந்தான் என்பதை உணர முடிகின்றது.

எருதும் அதனைத் தழுவ வந்த பொதுவரும் இருக்கும் தொழுவமானது, இருபெரும் வேந்தர்கள் எதிர்நின்று போரிட்ட போர்களம் போன்று இருந்ததனை,

**"................ ஏறும் பொதுவரும் மாறுற்று, மாறா**
**இருபெரு வேந்தரும் இகலிக் கண்ணுற்ற**

**பொருகளம் போலும், தொழூஉ"**

(**கலித்தொகை, 2007: 105:47-49**)

என்ற வரிகளில் தெரியமுடிகிறது. பகை உடைய வேந்தர்கள் பகையைத் தீர்த்துக் கொள்ளுவதைப் போன்று பொதுவனும், எருதும் தொழுவத்தில் போரிடுதலையும் அறியமுடிகின்றது.

## பொதுவனின் வீரம்

ஆய்மகன் ஏற்றினை வருந்தும்படி தழுவினான். அதனால் எருதுபடும் துன்பத்தைக் கண்டவர்கள் எழுந்தனர். உரிமையாளர்கள் ஆய்மகன் மீது பகை கொண்டனர். ஆனாலும் ஆயரினத்து மக்களின் உறவினர்கள் எருதினைக் கொல்லுங்கள்? என்று கூறியதனை,

**“வருத்தினான் மன்ற, அவ் ஏறு,**
**ஏறு எவ்வம் காணா எழுந்தார் - எவன் கொலோ**

**ஏறு உடை நல்லார் பகை**
**மடவரே, நல்ஆயர் மக்கள் - நெருநை,**
**அடல் ஏற்றெருத்து இறுத்தார்க் கண்டும் மற்று இன்றும்,**
**உடல் ஏறு கோள் சாற்றுவார்”**

(**கலித்தொகை, 2007: 102:27-32**)

என்ற வரிகளில் அறியமுடிகின்றது. ஆயர்கள் எருதினை அடக்கியது மட்டுமின்றி, அவ்வெருதினைக் கொன்றால் மட்டுமே ஆய்மகனின் முழுமையான வீரம் வெளிப்படுத்தவே உறவினர்கள் அவ்வெருதினைக் கொல்லுமாறு கூறினார்கள் என்பதை உணரமுடிகின்றது.

## வெற்றி பெற்ற பொதுவன்

புலிக்கூட்டமும், யானைக்கூட்டமும் போரிட்டுக் கொள்வதைப்போல எருதுடன் போரிட்டு வெற்றி பெற்று தொழுவத்திலிருந்து வெளியே ஆய்மகன் வந்தான் என்பதை,

**“ஆங்கு, இரும்புலித் தொழுதியும் பெருங் களிற்றினமும்**
**மாறுமாறு உழக்கியாங்கு உழக்கி, பொதுவரும்**
ஏறுகொண்டு, **ஒருங்கு தொஉ விட்டனர்”**

(**கலித்தொகை, 2007: 103:56-58**)

என்ற வரிகளில் பொதுவனின் வெற்றி குறித்து அறியமுடிகின்றது.

## ஏறுதழுவி வென்றவனுக்கு மகளைத் தருதல்

ஏறுதழுவியவர்க்கே மகளைத் தருவேன் என்ற ஆயர்களின் குலவழக்கப்படி ஏறுதழுவ முன்வந்து, ஏற்றினை அடக்கக்கூடிய வீரமிக்க ஆயர்மகன் ஒருவனுக்கே தம் மகளை மணமுடிந்து தருவதாக முல்லைநில மக்கள் கருதியதை,

**“........................................முன் சமத்து ஆர்ப்ப**
**வழங்கு மாறு கொண்டு, வருபு வருபு ஈண்டி”**

(**கலித்தொகை, 2007: 101:10,11**)

என்ற வரிகளில் ஆயர்கள் தன் மகளுக்குக் கணவனாக, ஏற்றினை அடக்கும் வீரமும், திறமையும் உடைய ஆண்மகன் ஒருவனையே தேர்வு செய்தனர் என்பதும் இங்கு வெளிக்கொணரப்பட்டுள்ளது.

## வீரத்தை விரும்பும் ஆயர்மகளிர்

ஏறுதழுவுவதற்கு அஞ்சும் ஆண் மகனை மறுபிறவியிலும் கூட திருமணம் செய்ய விரும்பாதவர்கள் முல்லைநில மகளிர் என்பதை,

**“கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்**

**புல்லாளே, ஆய்மகள்”**

(**கலித்தொகை, 2007: 103:63,64**)

என்ற வரிகளில் அறியமுடிகின்றது. வீரத்தினைப் பெரிதாகப் போற்றி வாழ்ந்தவர்கள் ஆயர்மகளிர் என்பதிலிருந்து, இல்வாழ்க்கையில் வீரமிக்க ஆண் தம் கணவன் என்று கூறிக்கொள்வதையே விரும்பினர் என்பதையும் உணரமுடிகின்றது. ஆயர்மகளிர் ஊரார் தன்னை ‘இவள் கணவன் கொல்லேறு கொண்டான்’ என்று கூறக் கேட்பதே இன்பம் என்று கருதியதை,

**“கொல்ஏறு கொண்டான் இவள் கேள்வன் என்று- ஊரார்**
**சொல்லும் சொல் கேளா, அளை மாறி யாம் வரும்”**

(**கலித்தொகை**, 2007: 106:43,44)

என்ற வரிகளில் அறியமுடிகின்றது. ஏற்றினை அடக்கியவன் தான் தனக்கு, கணவனாக வர வேண்டும் என்ற எண்ணம் உடையவராக முல்லை நில மகளிர் இருந்தனர் என்பதை உணரமுடிகிறது. ஏறுதழுவி அவ்வேற்றினை ஊர்ந்தவனுக்கு முல்லைமலர் சூடிய பெண் உரியவள் என்பதை,

**“மல்லல் மழவிடை ஊர்ந்தாற்கு உரியள், இம்**

**முல்லையம் பூங்குழல் - தான்”**

(**சிலப்பதிகாரம்**, 2018: 17,18)

என்ற வரிகளின் காணமுடிகிறது. ஏறுதழுவுதல் மணவாழ்க்கை முறையில் ஈடுபடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட வீரச்செயலாகும் என்பதை அறியமுடிகிறது.

“முல்லை நில ஆயர்கள் ஆடு, மாடு போன்ற விலங்கினங்களைப் புலி முதலிய விலங்குகளிடமிருந்து காத்தல் பொருட்டும், கள்வரால் கவர்ந்து கொள்ளாமல் இருத்தல் பொருட்டும், இவர்தம் வீரம் இன்றியமையாததாயிற்று. இதனால் இந்நிலத்து ஆயர்கள் தம் மகளிரைத் திருமணம் செய்ய முன்வருவாரின் ஆற்றலை அறிந்தே மகட்கொடை நேரும் வழக்கத்தை உடையவராக இருந்தனர். இக்குல மகளீரும் காதல் வயப்பட்டாலும் அத்தகைய தறுகண்மை உடையவனையே கணவனாக ஏற்குமொரு கோட்பாடு உடையவராக இருந்தனர்” என்று சசிவல்லி (1985) கூறுகிறார். இதன் வாயிலாகத் தொழில்முறையில் ஆடுமாடுகளைக் காக்கும் வலிமையும் வீரமும் உடையவனைப் பெண்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தால் தலைவிக்குத் துன்பம் ஏற்படாமல் இன்பமாக வாழவைப்பான் என்று கருதி வீரமிக்க ஆணைத் திருமணம் செய்து வைத்தனர் என்பதும் உணரமுடிகின்றது.

## திருமணம்

திருமணம் என்பது ஆண், பெண் இருவரின் உறவுகளை வழிப்படுத்தும் ஒரு சடங்கு முறையாகும். முல்லைநிலத்தில் திருமண முறையானது வீரமுடைய ஆடவனுக்கும் பெண்ணுக்குமாக நடத்தப்பட்டது என்பதை முல்லைத்திணைப் பாடல் காட்டுகின்றது. "இன்றைய தமிழ் மக்களால் திருமணம், கல்யாணம் எனச் சுட்டியுரைக்கப்படும் மணமுறையினைத் தமிழர் வதுவை, மன்றல், மனம் எனக் குறித்துள்ளனர். திருமணம் என்பது மனிதனுக்காக மனிதனால் நடத்தப்படும் ஒருவகைச் சடங்கு" என்பார் க. காந்தி (2003) இதன்வாயிலாகத் திருமணம் வாழ்க்கைச் சடங்காக நடத்தப்படுகிறது என்பதை உணரமுடிகிறது.

## முல்லை நிலத்து மக்களின் திருமணமுறை

திருமணத்தின் போது ஆற்று மணலை இல்லத்தில் முன் நிலத்தில் கொட்டி வீட்டுக்குச் செம்மண் பூசியும், பெண் எருமையின் கொம்பினை நட்டுவைத்தும் முல்லை நிலத்து மக்கள் தம் மகளுக்குத் திருமணம் செய்து வைத்தனர் என்பதை,

**"தருமணல் தாழப்பெய்து, இல் பூவல் ஊட்டி,**
**எருமைப் பெடையோடு, எமர் ஈங்கு அயரும்**

**பெரு மணம் எல்லாம்......................"**

(**கலித்தொகை, 2007: 114:12-14**)

என்ற வரிகளின் மூலம் சங்க காலத்தில் முல்லை நிலத்து மக்களின் திருமணமுறையினைப் பற்றி தெரிந்துகொள்ள முடிகின்றது. மேலும்,

**"வரைப்பில் மணல் தாழப்பெய்து, திரைப்பில்**
**வதுவையும் ஈங்கை அயர்ப..............."**

(**கலித்தொகை, 2007: 115:19,20**)

என்ற வரிகளில் ஆயர்கள் திருமணத்தின் போது வீட்டிற்கு முன் புதுமணலைப் பரப்பிப் பந்தலிட்டு அங்குத் திருமணத்தை நடத்தியதை அறியமுடிகிறது.

முல்லை நிலத்து மக்களின் திருமணம் இல்லத்திலேயே நடந்தது. திருமணத்தின் போது வீட்டினை அலங்கரித்து பந்தலிட்டு திருமணத்தை அந்தப்பந்தலின் கீழே நடத்தியதையும் இதன் வாயிலாக, சங்ககால மக்களின் எளிய திருமண வாழ்க்கைச் சடங்குகளையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

## முல்லை நிலத்தாரின் வீரமும் திருமணமும்

முல்லைநிலத்து மகளிர் தன்னைத் திருமணம் செய்யும் ஆடவன் ஏறுதழுவியவனாக இருக்க வேண்டும் என்று நினைத்தனர். சங்க காலத்தில் ஏறுதழுவுதல் நிகழ்ச்சி திருமணத்திற்காக மேற்கொள்ளப்பட்டது. தற்காலத்தில் ஏறுதழுவுதல் என்பது 'மஞ்சுவிரட்டு' 'ஜல்லிக்கட்டு' என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. இது தைத் திருநாளாம் பொங்கல் திருநாளின் இரண்டு, மூன்றாம் நாள்களில் நடைபெறும். இந்நிகழ்வு இன்று அதிகமாக மதுரை, அலங்காநல்லூர் போன்ற பகுதிகளில் நடைபெறுவதைக் காணமுடிகிறது. வீரத்தை வெளிக்காட்டும் வீர விளையாட்டாகவே ஏறுதழுவுதல் அமைகின்றது. இது தமிழரின் பாரம்பரிய நிகழ்வாகக் கருதப்படுகிறது.

## இருதிருமணம் புரிதல் நெறியன்று

ஆயர்மகள் தன் காதலனோடு கூடுதல் ஒருமணமாகும். அவ்வாறு விரும்பியவரை அல்லாது வேறு ஒருவரை மணம் முடித்துக் கொள்வது இரண்டாவது முறை திருமணம் செய்து கொள்வதற்கு ஒப்பாகும். இஃது ஆயர் குடியில் பிறந்தவர்களுக்கு முறையல்ல. அதனால் உலகமே கிடைக்கப் பெறினும் அதனைப் பெறுவதற்கு எண்ணாமல் அருநெறி பேணுபவராக விளங்கினர். இதனை,

**"திருநுதல் ஆய்த்தார் தம்முள் புணர்ந்த**
**ஒருமணம் தான் அறியும், ஆயின் எனைத்தும்**
**தெருமரல் கைவிட்டு இருக்கோ அலர்ந்த**
**விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்,**
**அருநெறி ஆயர் மகளிர்க்கு,**
**இருமணம் கூடுதல் இல் இயல்பு அன்றே"**

(**கலித்தொகை, 2007: 114:16-21**)

என்ற வரிகளில் அறியமுடிகிறது. இதன் வழி ஆயர்மகளிர் தாம் விரும்பிவரைத் தவிர வேறு ஒருவரைத் திருமணம் செய்யமாட்டார்கள் என்பதும் அவர்களின் வாழ்வியல் நெறியாகும்.

## பழக்கவழக்கங்கள்- வழிபாடு

வழிபாடு என்பது பழங்காலத்தில் ஏற்படுத்தப்பட்டதொரு பக்தி நெறியாகும். ஆதிகாலத்தில் மனிதன் இயற்கை சார்ந்த காடு, மலை போன்ற பகுதிகளில் வாழ்ந்தான் இயற்கைப் பாதிப்புகளால் ஏற்பட்ட அச்சத்தால் இயற்கையை வழிபடத் தொடங்கினான். பின்பு, இவ்வழிபாடு பெரு தெய்வ, சிறுதெய்வ வழிபாடாகவும் மாற்றம் பெற்றது.

"தெய்வ வழிபாடு என்பது எல்லாம் வல்ல இயற்கைச் சக்தியாகிய பஞ்ச பூதங்களை எண்ணி அவை மனிதனை ஆட்டிப் படைக்கும் போது அச்சத்தால் வணங்கி வரப்பட்டது. தனக்கு நன்மை தர வேண்டியும் வழிபாடுகள் நடத்தப்பட்டு வந்தன. இவ்வாறு பண்டையத் தமிழர் வாழ்வியலில் தெய்வ பக்தியும் வழிபாட்டு முறைகளும் சிறந்தோங்கி இருந்தன" என்று க. இராசமாணிக்கம் (2006) விளக்கம் தருகின்றார். அச்சத்தின் காரணமாக தெய்வத்தை வழிபடத் தொடங்கிய மக்கள் பின் அவற்றையே நம்பிக்கையின் அடிப்படையில் வழிபடத் தொடங்கினர்.

மேலும், ஆதிகாலத்தில் மக்கள் பஞ்ச பூதங்களைத் தெய்வங்களாகப் பாவித்து வழிபட்டனர் என்பதை, "இயற்கையின் கூறுகளான நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம், மலை, ஞாயிறு, திங்கள் போன்ற இயற்கைப் பொருள்களை வழிபடும் தன்மையினையே இயற்கை வழிபாடாகக் கருதுவர்" என்று க. காந்தி (2003) விளக்கிக் கூறுகிறார். இன்றளவிலும் மழை வேண்டி வழிபாடு செய்தும், சூரியனை அதிகாலையில் வழிபட்டும் வருகின்றனர் என்பதைக் காணமுடிகின்றது.

## மரவழிபாடு

தமிழகத்தில் பண்டுதொட்டு மரவழிபாட்டினைப் போற்றி வந்தமையைச் சங்க இலக்கியச் சான்று கொண்டு அறிய முடிகின்றது. மரத்தில் தெய்வம் இருப்பதாகக் கருதி வழிபட்டமையே மரவழிபாடு எனக் கருதப்படுகிறது.

சங்க காலத்தில் மக்கள் இயற்கையாகிய நீர்த்துறையிலும், ஆலமரம், மாமரம் ஆகியவற்றின் கீழ் தெய்வம் இருப்பதாகக் கருதி வழிபட்டனர். தம்

செயல் நிறைவேறுதற் பொருட்டு அவற்றை வழிபடுவது பண்டையத் தமிழர் மரபாகும். அவ்வகையில் ஏறுதழுவச் செல்லும்பொழுது வீரன்,

> **“துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்**
> **முறையுளி பராஅய், பாய்ந்தனர், தொழூஉ”**

(**கலித்தொகை, 2007: 101:13,14**)

கன்னித் தெய்வம் இருக்கும் நீர்த்துறையையும், சிவன் தவமிருக்கும் ஆலமரத்தையும் வழிபாடு செய்தான் என்பதை மேற்கண்ட பாடல் மூலம் அறியமுடிகிறது. சங்ககாலம் தொட்டே மக்கள் மரத்தினை வழிபட்டுள்ளனர். இதே போன்று வேப்பமரம் அரசமரம் போன்ற மரங்களை வழிபடுவதைத் தற்காலத்திலும் காணமுடிகின்றது.

“சங்க காலத்தில் இருந்தே கல்நட்டு வீரர்களையும் தெய்வங்களையும் வழிபடும் மரபு நம் மக்களிடையே நிலவி வருகிறது. அம்மரபின் வளர்ச்சியே மரநிழல்களில் கூடி இறைவனை வழிபடும் முறையாகும். இன்றும் ஒவ்வொரு கோவிலிலும் ஒரு தலவிருட்சமாக ஒரு மரம் இருப்பதை சான்றாகச் சுட்டலாம்.

| தலமரம் | - | கோவில் |
|---|---|---|
| வேம்பு | - | திருவேற்காடு |
| கடம்பு | - | கடம்பவனம் |
| பனை | - | திருப்பனந்தாள் |
| ஆலமரம் | - | திருக்குற்றாலம் |
| மாமரம் | - | கச்சி |
| மருதமரம் | - | திருவிடை மருதூர் |
| புன்னைமரம் | - | புன்னை வனம் |
| முல்லை | - | திருமுல்லை வாயில் |
| புன்கு | - | திருப்புன்கூர் |
| பாதிரி | - | திருப்பாதிரிப்புலியூர் |
| பலா | - | திருக்குறும்பலா(திருக்குற்றாலம்) |
| மூங்கில் | - | திருநெல்வேலி |
| வாழை | - | திருமருகல் |

போன்ற இடங்களில் மரங்கள் தலமரங்களாக வழிபடப்படுகின்றன” என்று ந. அறிவுராஜ் (2008) கூறுகிறார். இன்றும் இவ்வகை மரவழிபாடு பரவலாக இருப்பதைக் காணமுடிகின்றது.

இத்தகைய மரவழிபாடானது மக்களின் அச்சத்தால் தோன்றியது எனலாம். "மாந்தர் ஆவி ஆன்மா சாவுக்குப் பின்பு கண்ணுக்குப் புலப்படாமல், மரங்களில் மறைந்து வாழ்கிறது என்பது நம்பிக்கை. நல்லோர், ஆவி ஆன்மாவைப் போலத் தீயோர் ஆவியும் ஆன்மாவும் மரங்களில் உறையும் அல்லவா? நல்லோர் நன்மை செய்வதைத் தொடர்வதைப் போலத் தீயோர், தீமை செய்வதைத் தொடருவர் அல்லவா? எனவே பேய் போன்று, உருவிலேயே தோற்றம் அளிக்கும் இலுப்பை புளி போன்ற மரங்களில் தீயோர் தம் ஆவி உறைவதாக நம்பப்பட்டது. நம்பப்படவே அம்மரங்களின் மேல் மக்களுக்கு அச்சம் எழுந்தது. அவற்றை வழிபட்டால் அவை தீங்கு செய்யாது என்ற நம்பிக்கையாக வளர்ந்தது. எனவே இத்தகு மரங்களும் வழிபடு மரங்ககளாயின" (அறிவுராஜ், 2008) என்று கூறுகின்றார்.

மரங்களுக்குள் இருக்கின்ற ஆற்றல் வெளிப்படும் பொழுது அது மனிதனுக்கு நல்லதைச் செய்வதாக அமைகிறது. எனவே மரத்திற்குள் தெய்வத்தன்மை உள்ளது என்ற நம்பிக்கை பழங்காலத்தில் இருந்துள்ளது. மரங்களின் காற்றைச் சுவாசிப்பதால் நோய்கள் குணமாகும் என்ற நம்பிக்கையும் இதற்குக் காரணமாகும்.

## எருமைக் கொம்பினை வழிபடுதல்

ஆயர்கள் திருமணத்தின்போது பெண் எருமையின் கொம்பினைத் தெய்வமாகப் பாவித்து வழிபட்டனர் என்பதை,

**"எருமைப் பெடையோடு, எமர் ஈங்கு அயரும்**
**பெரு மணம் எல்லாம் தனித்தே ஒழிய"**

(**கலித்தொகை, 2007: 114:13,14**)

என்ற வரிகளின் வாயிலாக அறியமுடிகின்றது. ஆயர்கள் ஆநிரைகளை வளர்ப்பவராகவும் அவற்றை வழிபடுபவராகவும் இருந்தமையை இதன்மூலம் விளங்கமுடிகின்றது. இஃது இவர்களின் குலவழக்கம் எனலாம்.

## திருமால் வழிபாடு

முல்லை நிலத்திற்குரிய கடவுள் கரிய நிறத்தை உடைய திருமால் ஆவான், தொல்காப்பியர்,

**"மாயோன் மேய காடுறை உலகமும்"**

(**தொல்காப்பியப் பொருளதிகாரம்**, 2008)

என்ற நூற்பாவில் காட்டில் உறையக்கூடியவன் திருமால் என்பதையே சுட்டுகிறார். ஏனெனில் முல்லை காடும் காடு சார்ந்த பகுதியுமாதலால் காடுறை என்கிறார்.

சக்கரப்படையை உடைய தொன்மை மிக்க கடவுள் திருமால். இத்திருமாலை முல்லை நில மக்கள் வழிபட்டனர் என்பதை,

**"தொல் கதிர்த் திகிரியாற் பரவுதும் ஒல்கா"**

(**கலித்தொகை, 2007: 104:78**)

என்ற வரியில் அறியமுடிகின்றது. முல்லை நிலத்து மக்கள் திருமாலினை வழிபட்டு வந்தமையையும், சங்க காலத்து நிலக்கடவுளாக இருந்த திருமால் தொன்மை மிக்க கடவுள் என்பதையும் அறியமுடிகின்றது.

பாண்டிய மன்னனின் ஆட்சி இமயத்திற்கு அப்பாலுள்ள நாடுகளையும் சென்று பரவட்டும் என்று பாம்பணையில் துயில்பவனாகிய திருமாலை ஆயர்கள் வழிபட்டனர். இதனை,

**"பாடு இமிழ் பரம்பகத்து அரவணை அசைஇய**
**ஆடு கொள் நேமியாற் பரவுவதும்..................."**

(**கலித்தொகை, 2007: 105:71,72**)

என்னும் கலித்தொகை வரிகளின் மூலம் உணரமுடிகின்றது. பாண்டிய மன்னன் ஆயர்கள் போற்றும் அளவிற்குச் சிறந்து விளங்கியமையை அறியமுடிகின்றது.

சங்க காலத்தில் போற்றப்பட்ட திருமால், பக்தி இலக்கிய காலத்தில் வைணவர்களின் கடவுளாகப் போற்றபடுகிறார். இதனால் பன்னிரு திருமுறைகள் தோன்றின. திருமாலின் புகழைப் போற்றிப் பாடுவதற்காக கிருட்டிணன், ராமர், பெருமாள், பலராமன் என்ற பலபெயரில் வழிபடுகின்றனர்.

சங்க காலத்தில் திருமாலை வழிபட்ட "(ஆயர்) கோனார் வைணவர்கள் கிருஷ்ண பகவானைப் பல்வேறு பெயர்களால் வழிபடுகின்றனர். அவர்கள் சனிக்கிழமையைப் புனித நாளாகக் கருதுகின்றனர். கோகுலாஷ்டமிதான் அவர்களுக்கு மிக முக்கியமான திருநாள் அதற்கு மறுநாள் நடக்கும் உறியடி உத்ஸவத்தின் போது கிருஷ்ணரின் பால லீலைகளாகிய வெண்ணெய்

திருடுதல், தயிர்ப்பானை உடைத்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்” என்று எஸ். எஸ். சஷி (1990) கூறுகிறார். இதன் வாயிலாக ஆயர்கள் வழிபட்ட திருமாலைப் பிற்காலத்தில் பல பெயர்களில் வழிபட்டதை அறியமுடிகின்றது. திருமாலைப் பக்தி இலக்கியத்தில் சமயக் கடவுளாக வழிபடுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## காமன் வழிபாடு

காமனைச் சங்க கால மக்கள் காதற் கடவுளாகவும், கணவன் மனைவி இருவரும் இன்பத்துடன் பிரியாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் வழிபட்டனர். இக்கடவுளைப் பெரும்பாலும் பெண்களே வழிபட்டுள்ளனர்.

“வேதகாலக் கடவுளான காமன் மாயோனின் மகனாகக் கருதப்படுகிறான். இவனை அழகின் தேவன் என்றும் உயிர்களுக்குக் காமத்தை உண்டாக்கும் தெய்வமென்றும், புராணங்கள் சுட்டுகின்றன. இவனைக் காமவேள், மன்மதன், வேனிலான் எனவும் அழைப்பர் மகளிரே இவனை வழிபட்டு வேண்டுவர் சிறந்த கணவனைத் தனக்குத் தர வேண்டும் எனவும் தம் கணவன் தம்மிடத்தே அன்புடன் பிரியாமலிருக்க வேண்டுமெனவும் காமனைப் பெண்கள் வேண்டி வழிபட்டு வருகின்றனர்” என்று க.காந்தி (2003) கூறுகிறார். இதன் வாயிலாகப் பெண்களே காமனை வழிபட்டு வந்தனர் என்பதை அறியமுடிகின்றது.

“வடபுல இதிகாச புராணங்களில் காமன் பற்றிய தொன்மம் பரவலாய் இடம்பெற்றுள்ளது. வேதத்தில் மற்ற கடவுளர்களோடு ஒப்பிட இயலாதவனாகக் கருதப்பட்டதுடன் காமன் வழிபாடு இருந்தமையை வில்கின்ஸ் எடுத்துக்காட்டுகின்றார். இதன் மறுபுறத்தே இவன் காதல் கடவுளர்களோடு விளங்கியதையும் அவர் குறிப்பிடுகிறார். மேலும் அதர்வண வேதத்தில் எல்லாக் கடவுளுக்கும் மேம்பட்ட கடவுளாக விளங்கியதோடு காதல் தெய்வமாகக் கருதப்பட்டமையும் வில்கின்ஸ் குறிப்பிட்டுள்ளார்” என்று பெ.மாதையன் (2001) கூறுகிறார். வடமொழி இலக்கியத்திலும் காமனைக் காதற் கடவுளாகவே போற்றினர் என்பதை அறியமுடிகின்றது.

“வடபுல மரபில் காமன் பெருந்தெய்வமாய் வழிபாட்டிற்குரியவனாய் இருந்ததோடு காமபானம் உடைய காதல் தெய்வமாகவும் மீன் இலச்சினை உடையவனாகவும் இரதியின் கணவனாகவும் காட்டப்பட்டு உள்ளான்” (மாதையன், 2001) காமன் பெரு தெய்வமாக வடமொழி மரபில் வழிபடப்பட்டதையும், காதல் தெய்வமாக விளங்கியதையும் அறியமுடிகின்றது.

முல்லை நிலப் பெண்கள் காமனை வழிபட்டனர் என்பதையும், பாலினை வழிபாட்டுப் பொருளாக எடுத்துச் சென்றதை,

**“படை இடுவான் மன் கண்டீர், காமன் மடை அடும்**
**பாலொடு கோட்டம் புகின்”**

(**கலித்தொகை, 2007: 109:19,20**)

என்ற வரிகளில் பெண்கள் காமனை வழிபட்டதை அறிந்துகொள்ள முடிகின்றது. காமன் கோவிலுக்குந் சென்று பெண்கள் வழிபட்டமையை, சிலப்பதிகாரம்,

**“சோமகுண்டம், சூரியகுண்டம், துறைமூழ்கிக்,**

**காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு**
**தாம் இன் புறுவா; உலகத்துத் தையலார்**
**போகம்செய் பூமியினு பேய்ப்பிறப்பர், கணவரொடு”**

(**சிலப்பதிகாரம், 2018: 9:59-62**)

என்ற வரிகளில் சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய நதியில் நீராடி காமனின் கோவிலுக்குச் சென்று வழிபட்டனர், இதனால் கணவனைப் பிரியாது மறுபிறப்பிலும் போக வாழ்வினைப் பெற்று இன்புறுவர் என்பதை உணர்த்துகின்றது.

“இறைவன் ஒருவனே, உயிர்கள் அதன்தன் பக்குவ நிலைக்கேற்ப இறை உருவத்தைத் தன்னுள் பதித்து வைத்துள்ளன. அத்தகைய உருவத்திற்குப் பூஜை செய்கின்றனர்” என்று இரா.சந்திரசேகரன் (2011) கூறுகிறார். இதன் வாயிலாக இறைவனைப் பல உருவங்களில் வழிபட்டு வந்த முறை பற்றி அறியமுடிகின்றது.

” பாசப்பற்று விடுதற் பொருட்டு முதல்வனைப் பற்றும் முறையே கடவுள் வழிபாடு எனப்படும். பொது வழிபாடாவது இறைவனது அருளாணை ஆகிய அறத்தின் வழி நிற்றல். இது பொது ஒழுக்கம் எனவும்படும். இஃது இல்லறம் துறவறம் என இருவகைப்பட்டு முறையே அன்பையும் அருளையும் அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தத்தக்கது” (சைவமும் வைணவமும், 2003) என்ற கருத்திலிருந்து பக்தி இலக்கிய காலத்தில், வீடுபேறாகிய இறைவனை அடைவதற்காக வழிபட்டனர் என்பதை அறியமுடிகின்றது.

சங்க காலத்து மக்கள் இயற்கையாகிய மரவழிபாட்டில் இருந்து உருவ வழிபாடான திருமால், காமன் போன்ற தெய்வங்களையும் வழிபட்டனர். இறைவனை வேண்டி வணங்கினால் துன்பம் நீங்கும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகின்றது.

## தொய்யில் வரைதல்

ஆயர்மகளிர் தொய்யில் வரைந்து அழகு செய்து கொண்டனர்.

"ஓவியக்கலை சிறப்புற்றிருந்த சங்ககாலத்தில் சந்தனம் போன்ற மணற்கலவையால் மகளிரின் நெற்றியில், தோள்களில், மார்பில் என இலை, கொடிமலர் போன்ற ஓவியங்களை அழகுற எழுதுவர். இக்கலை தொய்யில் எழுதுதல் எனப்படும்" *(Alakammai, 2001)* இக்கருத்து தொய்யில் கலையைப்பற்றி அறியும்படி அமைந்துள்ளது.

மார்பில் பெண்கள் தொய்யில் எழுதிக் கொள்வர் என்பதை,

**"ஐய பிதிர்ந்த சுணங்கு அணி மென் முலைமேல்**
**தொய்யில் எழுதுகோ மற்று................................"**

(**கலித்தொகை**, **2007: 101:16,17**)

என்ற வரிகளில் அறியமுடிகின்றது. சங்க காலத்து மக்கள் நறுமணப் பொருள்களால் தொய்யில் வரைந்து ஒப்பனை செய்து கொள்ளும் பழக்கத்தை உடையவராக இருந்தனர் என்பதைக் காணமுடிகின்றது.

தற்காலத்தில் தொய்யில் எழுதுவதைப் போன்று கலர் சாயத்தைப் பயன்படுத்தி பல்வேறு உருவங்களை வரைந்து கொள்கின்றனர் என்பதை கண்கூடக் காணமுடிகின்றது.

## விளையாட்டு

விளையாட்டு உடல் நலத்தைப் பேணுவதோடு மனநலத்தையும் பேணுகிறது. பெரியவர் முதல் சிறியவர் வரை பாலின வேறுபாடின்றி அனைவருமே விளையாட்டில் விருப்பமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். சங்க காலத்தில் வீர விளையாட்டுக்கள் ஆடவர்க்குரிய விளையாட்டுக்களாகவும்,

பெண்ணின் மென்மைத்தன்மைக்கேற்ப மகளிர்க்குரிய விளையாட்டுக்களானது அமைந்திருப்பதையும் பாடல்களால் அறியமுடிகின்றது.

## சிற்றில் விளையாட்டு

சிற்றில் விளையாடுதல் மகளிர்க்கு உரியது. ஆற்று அறல் மணலைக் கொண்டு மணல் வீடு கட்டி விளையாடினர் என்பதை,

**“வரி மணல் முன்துறைச் சிற்றில் புனைந்த”**

(**கலித்தொகை, 2007: 114:15**)

என்ற வரியில் அறியமுடிகின்றது. மேலும்,

**“புல்லினத்து ஆயர் மகளிரோடு எல்லாம்**
**ஒருங்கு விளையாட அவ்வழி வந்த**
**குருத்தம்பூங் கண்ணிப் பொதுவன், மற்று என்னை,**
**முற்று இழை ஏஎர் மடநல்லாய் நீ ஆடும்**
**சிற்றில் புனைகோ, சிறிது...............................”**

(**கலித்தொகை, 2007: 111:5-9**)

என்ற வரிகளில் ஆட்டினத்து மகளிரோடு தோட்டத்தில் சிற்றில் இழைத்து விளையாடினர் மாட்டினத்து ஆயர் மகளிர் என்பதை அறியமுடிகிறது. முல்லை நிலத்தில் மகளிர் சிற்றில் இழைத்து விளையாடி மகிழ்ந்துள்ளனர். சங்ககாலத்தில் அதிக அளவில் விளையாட்டுகள் இருந்தன. அதில் சிற்றில் விளையாட்டும் ஒன்றாகும் என்பதை அறியமுடிகின்றது.

## முடிவுரை

கலித்தொகையில் முல்லைத் திணைப் பாடல்களைக் கொண்டு மக்களின் வாழ்க்கை முறை இக்கட்டுரையில் ஆராயப்பட்டது. முல்லை நிலத்தாரின் வாழ்க்கையின் தொடக்கமாக ஏறுதழுவுதலும், அது குறித்த தொன்மங்களும் ஆராயப்பட்டன. இதன்மூலம் ஏறுதழுவி ஏற்றினை அடக்கிய ஆடவரையே முல்லை நிலப்பெண்கள் திருமணம் செய்துகொள்ள விரும்பியுள்ளனர் என்பது புலனாகிறது. முல்லை நிலப் பெண்கள் வீரத்தை விரும்புவதையும், இருமணம் புரியும் எண்ணமில்லா ஒழுக்கநெறி உடையவர்களாக இருப்பதையும்

அறியமுடிகின்றது. முல்லை நில மக்களின் பழக்க வழக்கங்களான வழிபாடு, விளையாட்டு போன்றவற்றை அறியமுடிகின்றது. இவற்றில் பல வழக்கங்கள் இன்றளவும் கடைபிடிக்கப்படுகின்றன என்பது இக்கட்டுரையின்மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

## REFERENCES

Alagammai, K.P. (2001). Samuga Nokkil Sanga Mahalir, Chennai, Manivasagar Publication.

Arivuraj, N. (2008). *Nattupurasamayam*, Dindugal, Uma Publications.

Chandrasekaran, R. (2011.) *Tamil Ilakkiyam*: Vazhviyal Vizhumiyangal Panmuga Parvai, Coimbatore, Mahakavi Bharathiyar Noolagam.

Gandhi, K. (2003). *Pazhanthamizhar PazhakkaVazhkkangalum Nambikkaikalum*, Chennai, Ulaga Tamil Araichi Niruvanam.

Ilampuranar, (2008). *Tholkappiyam Porulathikaram*, Chennai, Sarada Publication.

Mathaiyan, P, (2001). *Varalatru Nokkil Sanga Ilakkiya Pazhamarabu Kathaikalum Thonmangal*, Thanjavur, Tamil University.

Puliyurkesikan, (2018). *Silappathikaram*, Chennai, Gowra Publications.

Rasamanikkam, K. (2006). *Pandaiya tamizhar Vazhviyal*, Selam, Tamilkudil, Publication.

Saivamum Vainavamum, (2003). Tamilnadu Government, Madurai, Arulmigu Meenakchi Sundareswarar Thirukoil.

Sanmugam Pillai, M. (1997). *Sanga Thamizhar Vazhviyal*, Chennai, Ulaga Tamil Araichi Niruvanam.

Sasi, S.S. (1990). *Indiavil Aayar Samuthayam*, Chennai, Institute of South Indian Stipees.

Sasivalli, (1985). *Tamizhar Vazhviyal*, Chennai, Ulaga Tamil Araichi Niruvanam.

Sivarajan, T. (1998). *Sanga Ilakkiya Vazhviyal*, Velur, Sivam Pathippagam.

Varatharasanar, M. (2004).*Thirukkural*, Chennai, Saiva Siddanandha Nool Pathippu Kazhakam.

Vengadasalam, R. (1957). *Senthamizh Katturaikal*, Thiruchi, Pazhaniyappa Brothers.

Viswanathan, A. (2007). *Kalithogai*, Chennai, New Cencury Book House.